# அமெரிக்கா தேசத்தைக் குறித்த தீர்க்கதரிசனங்கள்!



# அமெரிக்கா தேசம்

## உரைக்கப்பட்ட கர்த்தருடைய வார்த்தை

தீர்க்கதரிசி வின்சென்ட் செல்வக்குமார்



**2013வது வருடத்தில் கர்த்தருடைய சமூகத்தில் காத்திருந்து ஜெபிக்கையில் கர்த்தர் தேசங்களைப் பற்றி பேசிச் சொன்னதாவது:**

**01.** அமெரிக்காவே, இதோ, உனக்கு ஒரு அறுப்புக்காலம் நியமிக்கப்பட்டிருக்கிறது. சீக்கிரமே அந்தக் காலம் உன் மேலும் உன் தேசத்தின் குடிகள் மேலும் வரும். அது தீவிரித்து அநேகம் ஜனங்களைக் கொள்ளையிடும்படியாக உன் எல்லைகளில் பிரவேசிக்கும்.

**02.** என்னத்தினாலெனில், உன் சாங்கோபாங்கமான வாழ்வினிமித்தமும், உன் நிர்விசாரத்தினிமித்தமுமே அது வருகிறது. தேசத்தின் மேலும்,தேசத்தின் குடிகள் மேலும் என் தீர்ப்புகள் செலுத்தப்படும் நாட்கள் தீவிரித்து வருகிறது. உன் மதில்கள் தாழ்த்தப்பட்டு தேசத்தின் குடிகள் அலறித் திகைத்திருக்கையில் தேசமானது மீண்டும் மீண்டுமாக தன் ஸ்தானத்திலிருந்து தாழ்த்தப்படும். அந்தக் காலங்கள் வரும் முன்பாக நீ உன்னைத் திருத்திக் கொண்டால் நலமாயிருக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார் .

**03.** இந்த தேசம் தன் பலத்தினாலும், மினுக்கினாலும், பெருமையினாலும் வெறிகொண்டிருக்கிறது. இதன் வழிகள் வெறித்திருக்கிறவனுடைய வழிகளுக்கு ஒப்பாயிருக்கிறது. எளிய தேசங்களுக்குள் யுத்தங்களைப் புறப்படப்பண்ணி, அவர்கள்

வஸ்திரம் முதலாய் உரிந்துகொண்டது. எளியவர்களின் இரத்தம் பூமியில் சிந்தப்படுகையிலும், அவர்கள் நீதி அற்றுப்போகையிலும், பிள்ளைகள் தெருவோரம் கையேந்தி நிற்கையிலும் உன் கண்கள் பெருமையினால் நிறைந்திருந்திருந்தது. நாங்கள் பலவான்கள் என்றும் எங்கள் பெருமையினால் இது நடந்தது என்றும் உன் இருதயம் உன்னோடே பேசிற்று.

**04.** என்னைக் கேட்க யாருமில்லை என்றும் என் கிரியைகளைக் கண்டறியத்தக்கவன் ஒருவனும் இல்லை என்றும் உன் இருதயத்தில் நீ நினைத்திருக்கையில், நான் அவைகளைப் பார்த்தேன். என் செவிகள் உன் இருதயத்தின் வார்த்தையைக் கேட்டது.

**05.** ஆயினும் என் சித்தம் நிறைவேறக் காத்திருக்கிறவர்களும், என் நாமம் தரிக்கப்பட்ட ஜனங்களும், நீதியை நேசிக்கிறவர்களில் சிலரும், என் வார்த்தைகளைப் பற்றிக்கொண்டிருக்கிற சில சபைகளும் இங்கே உண்டு. இவர்களினிமித்தம் நான் செய்ய நினைத்ததைச் செய்யாமல் தாமதம் பண்ணி, மனந்திரும்பவும், தப்பிக்கொள்ளவும் சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறேன்.

**06.** இக்காலங்களில் தேசத்திற்காக உத்திரவாதம் செய்கிறவர்களும், திறப்பில் நிற்கிறவர்களும் திரளாய் எழும்பி ஜெபித்தால் நலமாயிருக்கும். அவர்கள் தங்கள் கண்ணீரினால் என் துருத்தியை நிரப்பி, தங்கள் தேசம் காக்கப்பட உத்திரவாதம் செய்து ஜெபித்தால் நலமாயிருக்கும். அப்போது தன்னலமற்ற ஜெபங்களை நான் கவனித்து தேசத்தின் தீமைகளை மட்டுப்படுத்துவேன். பலவீனமான தீமைகள் தானாகவே விலகிப்போகும்.

**07.** தீமைகள் நெருப்பைப் போலவும், தண்டனைகள் அதின் ஜுவாலையைப் போலவும், அழிவானது வெள்ளம் போலவும் புறப்பட்டு வருகையில் நான் அவைகளுக்கு

எல்லைகளை வைத்து அவை மீறாதபடிக்கு மட்டாக்குவேன். என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்களை தண்டனையின் மிலாற்றிலிருந்தும், அழிவின் பிடியிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளுவேன். ஜனங்களுக்காகப் பரிதபிக்கிறவனும், தேசத்திற்காக ஜெபிக்கிறவனும் முத்திரையிடப்படுவான். அவன் எல்லைகளை சங்காரக்காரன் தொடான்.

**08.** தேசத்தின் மேல் சாபமும், குற்றமற்றவர்களின் இரத்தத்தினால் உண்டான பழியும் இருக்கிறது. அன்றியும், என் நாமத்தைக் கொண்டு ஊழியம் செய்கிறோம் என்று பெயர் பண்ணுகிறவர்களின் அக்கிரமம் தேசத்தில் உயர்ந்திருக்கிறது. அது தேசத்தின் மேல் சாபத்தை வரவிடுகிறது.

**09.** நானே அவர்களை எழுப்பினேன். நானே அவர்களை உருவாக்கினேன். ஆயினும் அவர்கள் உலகத்திற்கும் அதின் இச்சைகளுக்கும் தங்களை விற்றுப்போட்டார்கள். ஆஸ்தியினாலும், திரளான ஐசுவரியத்தினாலும் தங்களை உயர்த்திக் கொண்டார்கள். அவர்கள் அலங்கங்கள் விலையேறப்பெற்ற கற்களினாலும், அவர்கள் வஸ்திரங்கள் ஆடம்பரங்களினாலும் நிறைந்திருக்கிறது. இரத்தாம்பரம் அவர்கள் கால்களின் கீழிருக்கிறது. அவர்கள் தலையில் பெருமையிருக்கிறது.

**10.** அவனவன் தன்னை ஜனங்களுக்குக் காவலனாயும், ஜனங்களை நடத்துகிறவனாயும் ஏற்படுத்திக் கொள்ளுகிறான். அவன் இருதயமெல்லாம் வேட்டையின் மேல் பறக்கிற வல்லூறுக்குச் சமானமாயிருக்கிறது. அவர்கள் என் திராட்சைத் தோட்டத்தைப் பட்சித்துப் போட்டார்கள். எளியவர்களிடத்தில் கொள்ளையிட்டது அவர்களிடத்திலிருக்கிறது. அவர்கள் களஞ்சியங்கள் கொள்ளையினால் நிறைந்திருக்கிறது.

**11.** அதினால் அவன் தன் எல்லைகளைச் செழிப்பாக்கிக் கொள்ளுகிறான். பட்சிகளைப் போல வானத்தில் பறந்து திரியவும், உசிதமானவைகளைத் தனக்கென்று

சேர்த்துக்கொள்ளவும், விலையானதைப் புசிக்கவும், பொல்லாப்பை பானம்பண்ணவும் தீவிரிக்கிறான்.

**12.** அவன் கண்கள் என்னை நோக்கிப் பார்க்கவுமில்லை. அவன் காதுகள் என் சத்தத்துக்கு செவிகொடுக்கவுமில்லை. ஆயினும் கர்த்தரிடத்தில் எனக்குச் சகாயம் உண்டென்றும், அவர் வார்த்தை என்னிடத்திலிருக்கிறது என்றும் சொல்லி ஜனங்களை வஞ்சிக்கிறான். தன் மனோராஜ்ஜியத்தில் கற்பனையைப் பிணைத்து நான் கற்பிக்காததை ஜனங்களுக்குக் கற்பிக்கிறான். தன்னை தேவனுக்கும் அவருடைய தூதனுக்கும் சமானமாக்குகிறான்.

**13.** பொய்யான தரிசனங்களைப் பிணைத்து இதைக் கர்த்தர் உரைத்தார் என்று ஜனங்களை நம்பப்பண்ணுகிறான். ஒருநாள் வரும் நான் அவர்கள் யாவருடைய முகத்திரைகளையும் ஒட்டுமொத்தமாய் கிழிப்பேன். அவர்கள் சொன்னதை அபத்தமாக்குவேன். ஆனாலும் அவர்கள் திரும்பமாட்டார்கள்.

**14.** நான் அப்படிச் செய்தாலும் அவர்கள் வார்த்தைகளை நம்புகிறவர்களும், அவர்கள் சத்தத்துக்கு செவி கொடுக்கிறவர்களும் அவர்களையே பின்செல்லுவார்கள். தீமையைப் போதிக்கிறவன் எப்படியோ, அவனை ஏற்றுக்கொள்ளுகிறவனும் அப்படியே தேசத்தின் சாபத்துக்குக் காரணமாயிருக்கிறான்.

**15.** கள்ள உபதேசங்களும், வேசித்தன ஆராதனைகளும், பணத்துக்காகச் செய்யப்படும் ஏமாற்று வேலைகளும் தேசத்தில் பெருகி, தேசத்தின் ஆவிக்குரிய மண்டலத்தைக் கறைப்படுத்தினதினால் அல்லவோ தேசத்தின் மேல் தீர்ப்பு வருகிறது. பற்றியெரிகிற நெருப்பைப் போல அது விரைவாக வருகிறது.

**16.** ஆளுகிறவர்கள் பொய்யானதை நம்பப் பண்ணுகிறார்கள். அவர்கள் தங்கள் ஜனங்களுக்குத்

துரோகம்பண்ணுகிறார்கள். ஐசுவரியவான்களின் ஆஸ்திக்கு விலைபோகிறார்கள். அவர்கள் தேசத்தைக் கொள்ளையிட அதின் கதவுகளைத் திறந்து வைக்கிறார்கள். ஜனங்களை மதிமயங்கப்பண்ண வேசித்தனத்தையும், களியாட்டங்களையும், விபச்சாரத்தையும் அங்கீகரிக்கிறார்கள்.

**17.** சோதோமின் பாவமும், கொமோராவின் பொல்லாங்கும் இங்கே அங்கீகாரம் பெறுகிறது. வீதிகளில் மாம்சம் விலைபோகிறது. பிள்ளைகள் தீட்டுப்பட்டுப் போகிறார்கள். விபச்சாரத்தின் இரத்தம் தினந்தோறும் சிந்தப்படுகிறது. வாலிபன் மயங்கித் திரிகிறான். அவன் கால்களில் திரியாவரம் இருக்கிறது. அவன் கைகளில் பயங்கரம் இருக்கிறது. அப்படியே வயோதிபனும் மயங்கித் திரிகிறான். அவன் கண்களில் இச்சையும், கைகளில் பொல்லாப்பும் இருக்கிறது. பாலகர்களும் பலியாகிறார்கள். ஆனாலும் இதைக் கவனிப்பாரும் தடுப்பாரும் இல்லை.

**18.** நகரங்களின் இரவுகள் பயங்கரமும், பாவத்தின் புகையினாலும் நிறைந்திருக்கிறது. அதின் துர்க்கந்தம் வானபரியந்தம் எட்டுகிறது. பார்க்கிறவனும், கேட்கிறவனும், புசிக்கிறவனும், குடிக்கிறவனும், நினைக்கிறவனும், செய்கிறவனும் பாவத்தையே விரும்புகிறான்.

**19.** தேசத்தின் ஞானிகள் தங்கள் ஞானத்தைக் கொண்டு பாவத்தை சாதிக்கிறார்கள். தீமையான விஞ்ஞானம் தேசத்தின் மறைவிடங்களிலிருக்கிறது. அதன் பொல்லாப்பு பயங்கரமும், தேசங்களை இரத்தம் சிந்த வைக்கிறதுமாயிருக்கிறது. அதினால் அநேகம் தேசங்களை ஜெயிக்கவும், அவைகளை பணிய வைக்கவும் நீ நினைக்கிறாய். துவக்கத்தில் காரியம் கைகூடிவரும். ஆயினும் மனுஷ கைவேலைப்பாடான தீமைகள் தேசத்தைக் கலங்கப் பண்ணும்.

**20.** அந்நாட்களில் புகையானது கிளம்பி தேசத்தின் சுவாசத்தைக் கெடுத்துப் போடும். மறைவிடத்திலிருந்தும், தூர

இடத்திலிருந்தும் சத்துருவானவன் எழும்புவான். ஞானிகள் திகைத்து, ஜனங்கள் பதறுவார்கள். ஆளுகிறவர்கள் தங்கள் அதிகாரத்தினால் இதைச் சாதிக்க முடியாதென்று கைவிரிப்பார்கள்.

**21.** சமுத்திரத்தில் அலை தோன்றுவதைப் போல தீமையானது அலையலையாய் பரவும். ஒன்று எளியவர்களைக் குறிவைக்கும். மற்றொன்று பிள்ளைகளைக் குறிவைக்கும். இன்னொன்று விருத்தாப்பியரைக் கொள்ளையிடும். இவைகளைக் காணும்போது என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்கள் வழிகளை மாற்றிக் கொள்ளாமலும், ஜெபிக்கிறவன் உத்திரவாதமெடுத்து ஜெபியாமலும் இன்னும் தன் நிர்விசாரத்திலே நிலைத்திருந்தால், தீமையானது என் வீட்டாரையும் கெடுத்துப்போடும்.

**22.** அப்போது என் ஆலயத்தின் பலிபீடங்கள் பாழாய்ப் போகும். ஆராதனை ஸ்தலங்களில் மரண ஓலம் உண்டாகும். மரிக்கிற மந்தையை மேய்ப்பனும், மரிக்கிற மேய்ப்பனை மந்தையும் அடக்கம் செய்யமாட்டாமல் அவர்களைக் கைவிடுவார்கள். அவர்கள் மறக்கப்பட்டுப் போவார்கள். அவர்கள் ஸ்தானங்கள் பாழாகும்.

**23.** தடை கட்டப்படாமல் தீமையானது தேசத்தில் சுற்றி வருகையில் கொஞ்ச நாட்களில் மரண ஓலமானது வீதிகளில் கேட்கும். அப்போது தாயின் மார்பு பிள்ளைக்கு விஷமாகும். புருஷனின் சுவாசம் மனைவிக்கும், மனைவியின் சுவாசம் அவள் புருஷனுக்கும் விஷமாகும். ஜனங்கள் தங்கள் ஆகாரத்தைப் பயத்தோடு புசித்து, தங்கள் பானத்தை நடுக்கத்தோடே குடிப்பார்கள். பறவைகளின் செட்டைகள் முறிந்துபோம். நடக்கிறவன் பதறுவான். கடக்கிறவன் அலறுவான். பறக்கிறவன் பயப்படுவான். வீதிகளில் இருளும், பாதைகளில் வெறுமையும் இருக்கும்.

**24.** விற்கிறவன் இல்லாமையால் வாங்குகிறவனும், வாங்குகிறவன் இல்லாமையால் விற்கிறவனும்

பசித்திருப்பார்கள். தேசத்தின் வேர்களை குழிநரிகள் பட்சிக்கும். விளைந்திருக்கிறவைகளை மிருகங்கள் மிதித்துப் போடும். தேசத்தின் ஐசுவரியம் பொட்டரித்துப் போகும். அநேகர் தங்கள் வேலைகளை இழப்பார்கள். பலருடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுப்போம்.

**25.** பின்னாட்களில் இரந்து திரிகிறவர்கள் வீதிகளில் கையேந்துவார்கள். பணத்துக்காக தங்கள் இரத்தத்தை விலைபேசுகிறவர்களும், தங்கள் மாம்சத்தை விலைபேசுகிறவர்களும் பெருகுவார்கள்.

**26.** வலுசர்ப்பமானது தன் வாயைத் திறந்து தேசத்தின் மேல் தன் சுவாசத்தையும், தன் வாயின் விஷத்தையும் கக்கும். அது அப்படிச் செய்யத் திட்டமிட்டு, தன் காரியத்தை நிறைவேற்ற யத்தனிக்கையில் நான் அதின் கிரியைகளுக்கும், அதின் பயங்கரங்களுக்கும் உன் கதவுகளைத் திறந்து கொடுப்பேன். உன் வாசல்களில் காவல்பண்ணுகிற தூதர்களை நான் திரும்ப அழைத்துக் கொள்ளுவேன்.

**27.** அப்போது உன் தேசம் வேலியில்லாத தோட்டத்தைப் போல மேய்ந்துகொள்ள விட்டு விடப்படும். அதேனென்றால், நீ நன்மையை வெறுத்து தீமையைப் பின்பற்ற விரும்பினதினாலும், உன் தேவனை மறந்து சர்ப்பத்தின் கிரியைகளைப் பற்றிக்கொண்டதினாலும், ஆள்கிறவன் பாவத்துக்கு தேசத்தின் கதவுகளைத் திறந்து வைத்ததினாலும்,

**28.** ஊழியக்காரன் அந்தகனாயிருந்து மந்தையை வஞ்சித்ததினாலும், கள்ள உபதேசிகள் என் வார்த்தைகளைக் கொண்டு தங்கள் வயிறுகளை நிரப்பிக் கொண்டதினாலும், பொல்லாத அதிகாரங்களுக்கு ஊழியர்கள் துணை போனதினாலும், கள்ளத் தீர்க்கதரிசிகள் அபத்தமானதை தரிசித்து ஜனங்களை வஞ்சித்ததினாலும், ஜனங்களோ கள்ள வார்த்தைகளுக்கும், கள்ள ஊழியர்களுக்கும் செவிகொடுத்து,

அவர்கள் வார்த்தையை ஏற்றுக்கொண்டு அவர்கள் கைகளைத் தாங்கினதினாலும் அப்படிச் செய்வேன்.

**29.** தேசத்தாரின் பாவத்துக்கும், அதை ஆள்கிறவர்களின் பெருமைக்கும், அதின் ஊழியர்களின் அக்கிரமங்களுக்கும் சரியாய் தண்டனையின் நாட்கள் இருக்கும். ஆகிலும் ஜெபிக்கிறவனும், உத்திரவாதம் பண்ணுகிறவனும் எழும்பி திறப்பிலே நின்று தேசத்துக்காகப் பரிந்து பேசி, கண்ணீரோடே ஜெபித்து உத்திரவாதம் பண்ணுவானேயானால் நான் தீமையின் நாட்களைக் குறையவும், அதின் வேகத்தை மட்டுப்படவும் பண்ணுவேன்.

**30.** தேசத்தின் மேல் வரும் தீமைகள் மனிதர்களாலும் அவர்களுடைய சுயநலத்தினாலும் உண்டான தந்திரங்களினாலேயே வரும். தேசம் என் வாயின் வார்த்தைகளை அலட்சியம் செய்து தாங்கள் கற்பித்துக் கொண்டதும், தாங்கள் இச்சித்ததுமான காரியங்களைப் பின்பற்றி சோரம் போனதினாலேயே நான் இவர்களுக்கு அனுமதி கொடுப்பேன்.

**31.** இதோ, நான் உங்களுக்குச் சொல்லுகிற இவைகளைக் கவனித்து தேசத்துக்காக பரிந்துபேசி ஜெபிக்க முன்வருகிற எவனும் என் வார்த்தைகளைக் கவனிப்பானாக. அவன் முந்தி தன் தேசத்தை ஆளுகிறவர்களுக்காகவும், அவர்களை அதிகாரம் செய்கிற வர்த்தகர்களுக்காகவும் ஜெபிப்பானாக.

**32.** தங்கள் தந்திரத்தினால் தங்களுக்கு அதிகாரமும், வல்லமையும், திரளான ஆஸ்தியும் பெருகப் பண்ணவும், சத்துருவானவனுக்குப் பாதைகளை செவ்வைபண்ணும்படி மகாவேசியின் தந்திரத்தோடே விபச்சாரம் பண்ணவுமே அவர்கள் தேசத்துக்கும் அதின் குடிகளுக்கும் தீமை செய்யத் தீவிரிக்கிறார்கள்.

**33.** தேசத்தின் குடிகளைக் கொள்ளையிட்டு, தங்களைப் பெருக்கிக்கொள்ளவும், அதிகாரங்களையும், ஆளுமைகளையும் தங்களுக்குக் கீழ்ப்படுத்தவும் அப்படிச் செய்வார்கள். தேசத்தின் பொருளாதாரம் வீழ்கையிலும், தேசத்தின் ஜனங்கள் தத்தளிக்கும் போதும் இவர்களுடைய களஞ்சியங்கள் நிரம்பும்.

**34.** அந்நிய தேசத்தாருடன் இவர்கள் சம்மந்தங்கலந்து தங்கள் தேசத்தின் மேல் தீமையானது கட்டவிழ்த்து விடப்பட அதின் அலங்கங்களைச் சேதப்படுத்தி, அதின் கதவுகளை பூட்டக்கூடாதபடிக்குச் செய்கிறார்கள்.

**35.** இவர்கள் அதிகாரங்கள் தேசங்களைக் கடந்தது. இவர்கள் எல்லைகள் பூமியின் அநேகம் தேசங்கள் வரைக்கும் செல்லுகிறது. இவர்கள் ஆளுகிறவனை ஆள்கிறார்கள். தங்களுக்கு இஷ்டமானவனை உயர்த்தவும், பிரியமில்லாதவனைத் தாழ்த்தவும் அதிகாரம் கொண்டு இருக்கிறார்கள். தேசத்தின் ஜனங்கள் தங்களை அண்டிப் பிழைக்கவும், தங்களுக்குக் கீழ்ப்பட்டிருக்கவும் வேண்டுமென்று கிரியை செய்கிறார்கள்.

**36.** வர்த்தகங்களுக்கும், நிறுவனங்களுக்கும், வியாபார ஸ்தலங்களுக்கும், உற்பத்தி நிறுவனங்களுக்கும் துறட்டைப் போட்டு அவற்றின் கயிறுகளை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வருவார்கள்.

**37.** தேசத்தை ஆளுகிறவர்களும், அதிகாரத்தில் இருப்பவர்களும் இவர்களுக்குத் துணை செய்கிறார்கள். அவர்கள் வழியாகக் கிடைக்கும் தற்பொழிவினால் தங்களை மேன்மைப்படுத்திக் கொள்கிறார்கள். இவர்கள் கூடிக் கொண்டு தேசத்தின் குடிகளுக்கு வேசித்தனத்தின் மதுபானத்தைக் கொடுத்து, களியாட்டுக்களினால் அவர்களை மயக்கம் கொள்ள வைத்து, அவர்கள் எலும்புகள் உருவப்படுவதை உணரவொட்டாமல் செய்கிறார்கள்.

**38.** தேசத்தின் விஞ்ஞானிகள் இவர்களுக்குத் துணை போவார்கள். இழிவான ஆதாயத்தை இச்சித்து இவர்கள் செய்யும் தந்திரங்களுக்கு தங்கள் ஞானத்தினால் உதவுவார்கள். பொல்லாத கிரியைகளை தேசத்தில் பரவச் செய்து ஜனங்களை அடிமைப்படுத்துவார்கள்.

**39.** தேசத்தின் மேல் உண்டாகும் தீமைகள் ஒன்றும் இவர்கள் அறியாமல் வருவதில்லை. சர்ப்பமும், அதின் தேசமும் தீமைகளைக் கட்டவிழ்த்து விட்டு தேசத்தைக் கவிழ்க்க யத்தனம் பண்ணுகிறது என்று சொல்லப்பட்டாலும், இவர்கள் அறியாமல் அதில் ஒன்றும் சம்பவிப்பதில்லை. தேசத்தின் மேல் தீமைகளைக் கட்டவிழ்க்கச் செய்யும் அந்நியரின் சதியில் இவர்களுடைய கைகளும் சம்மந்தங் கலந்திருக்கிறது.

**40.** இவர்கள் நோக்கமெல்லாம் ஜனங்களை வெறுமையாக்கி தங்களை உயர்த்திக் கொள்வதே. இவர்கள் என் தேசம் என் ஜனங்கள் என்று எதையும் நினைப்பதில்லை. இவர்கள் கூடிக் கொண்டு எல்லா தேசங்களுக்குள்ளும், எல்லா ஜாதிகளுக்குள்ளும் தீமைகளைக் கட்டவிழ்த்து விட்டு ஜனங்களைக் கட்டுப்படுத்தி தங்களை பலப்படுத்திக் கொள்வார்கள். பொல்லாதவனுடைய நாட்களில் இவர்கள் தங்கள் மகிமையை அவனுக்குக் கீழ்ப்படுத்துவார்கள்.

**41.** வரும் காலங்களில் அநேகம் தேசங்களில் பொருளாதார நெருக்கடிகளை வரவிட்டு, ஜனங்களை வெறுமையாக்கி அவர்களை அடிமைப்படுத்துவார்கள். இவர்களைத் தாண்டி வேறொருவரும் பலங்கொள்ளவோ, பெருகவோ கூடாதபடிக்கு செய்வார்கள். தங்கள் தந்திரங்களை அறிந்தவர்களையும், எதிர்க்கிறவர்களையும் கொலை செய்வார்கள். அவர்கள் இருந்த ஸ்தானமும் காணப்படாபடிக்கு செய்வார்கள்.

**42.** இவர்கள் காரியங்கள் வாய்க்கிறதினாலேயே இவர்கள் இவ்விதம் பலங்கொள்ளவும், தந்திரங்களால்

ஜனங்களை அடிமைப்படுத்தவும் செய்கிறார்கள். இவர்களை எதிர்க்க ஒருவராலும் கூடாது. ஆயினும் ஜெபிக்கிறவனும், தீமைகளைக் கட்டும்படிக்கு என் நாமத்தைத் தரித்திருக்கிறவனும் மாத்திரமே இவர்கள் காரியங்கள் வாய்க்காதே போகும்படிக்கு தடை செய்ய முடியும். அப்படிச் செய்கையில் மாத்திரமே அவர்கள் செய்ய நினைத்த தீமைகள் பலவீனமாகும்.

**43.** இதை சத்துருவும் அறிந்ததினாலேயே முந்தி அவன் என் ஊழியர்களை விலை பேசுகிறான். அவர்களைக் கொண்டு என் ஜனங்களை பலவீனப்படுத்தும்படி சபைகளைத் தீட்டுப்படுத்துகிறான். கள்ள உபதேசிகளையும், கள்ளத் தீர்க்கர்களையும் திரளாக எழும்பப்பண்ணி ஜனங்களை வழிமாறப்பண்ணுகிறான். தேசத்தின் அநேகம் ஊழியர்கள் இந்த வர்த்தகர்களிடத்திலும் அதிகாரத்திலிருப்பவர்களிடத்திலும் விலைபோகிறார்கள்.

**44.** எழுப்பப்பட்ட சவுல்கள் தங்கள் பட்டயத்தை கீழே வைத்து விட்டு கூடாரங்களில் தங்களை ஒழித்துக் கொண்டிருக்க, தேசத்திற்காக பாரப்படுகிற தாவீதுகள் எழும்பி யுத்தம் செய்தால் நலமாயிருக்கும். தங்கள் காரியம் நிறைவேறும்படி என்னைத் தேடாமல் என் காரியம் நிறைவேறும்படி என்னைப் பின்பற்றுகிறவர்கள் எழும்பினால் நலமாயிருக்கும். அவர்களுடைய பட்டயம் மாத்திரமே ஜெயிக்கும்.

**45.** கூலிக்காக வேலை செய்கிறவன் பலவீனன். தன்னை அனுப்பினவருடைய சித்தம் நிறைவேறக் கிரியை செய்கிறவனே பலவான். பலவான்கள் எழும்பி யுத்தம் செய்தால் மாத்திரமே இந்த தேசம் பத்திரப்பட்டிருக்கும். அதின் குடிகள் வாழ்ந்திருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.



## 1. பாவங்கள் மன்னிக்கப்பட மன்றாடுவோம்!

### ஊழியர்களின் பாவங்கள்

உலகத்திற்கும் அதின் இச்சைகளுக்கும் தங்களை விற்றுப்போட்டு, திரளான ஐசுவரியத்தினால் தங்களை உயர்த்தின பாவங்களை கர்த்தர் மன்னிக்க மன்றாடுவோம்.

கர்த்தர் கற்பிக்காததை ஜனங்களுக்கு கற்பித்து தன்னை உயர்த்திக் கொள்கிறார்கள். கள்ள உபதேசங்கள், இச்சைகளை தூண்டும் ஆராதனைகள், பணத்துக்காக செய்யப்படும் ஏமாற்று வேலைகள் மன்னிக்கப்பட மன்றாடுவோம். பொய்யான ஊழியர்கள் சொல்கிறதை அப்படியே ஏற்றுக்கொண்டு அதன்படி நடக்கிற விசுவாசிகளின் பாவங்களை கர்த்தர் மன்னிக்க மன்றாடுவோம்.

### தேசத்தின் பாவங்கள்

ஆடம்பரமான வாழ்க்கை, நிர்விசாரம், பெருமை, என்னைக் கேட்க யாருமில்லை என்ற எண்ணம். இந்த பாவங்கள் மன்னிக்கப்பட மன்றாடுவோம்.

சோதோம் கொமோரா பாவங்கள் (ஓரினச்சேர்க்கை), விபச்சாரங்கள், குடித்து வெறிக்கிற பாவங்கள், ஜீவனுள்ள தேவனை தேடாத பாவங்கள் மன்னிக்கப்பட மன்றாடுவோம்.

### ஆளுகிறவர்களின் பாவங்கள்

பொய்யானதை நம்பப் பண்ணி ஜனங்களுக்கு துரோகம் பண்ணுகிறார்கள். ஐசுவரியவான்களுக்கு விலை போய் தீமைக்கு தேசத்தின் கதவுகளைத் திறந்து வைக்கிறார்கள். வேசித்தனத்தையும், விபச்சாரத்தையும் அங்கீகரித்து ஜனங்களை மதி மயங்கப் பண்ணுகிற பாவங்கள் மன்னிக்கப்பட ஜெபியுங்கள்.

## 2. ஜெபிக்கிறவர்கள் திரளாய் எழும்ப ஜெபியுங்கள்!

தேசத்திற்காக உத்திரவாதம் செய்கிறவர்கள், திறப்பிலே நின்று ஜெபிக்கிறவர்களை கர்த்தர் திரளாய் எழுப்ப ஜெபிப்போம். அவர்கள் மேல் ஜெப ஆவி ஊற்றப்பட, யுத்த அபிஷேகம் ஊற்றப்பட, மன்றாட்டின் அபிஷேகம் ஊற்றப்பட ஜெபிப்போம். விசுவாசிகளுக்குள் தேசத்தைக் குறித்த விழிப்புணர்வு உண்டாக ஜெபியுங்கள்.

## 3. விஞ்ஞானிகளுக்காக ஜெபியுங்கள்!

விஞ்ஞானிகள் மூலம் தீமையான காரியங்கள் நிறைவேற்றப்படாமலிருக்க, பயங்கரமான காரியங்கள் சம்பவியாமலிருக்க, மற்ற தேசங்களை பாதிக்கக்கூடிய காரியங்களை செய்யாமலிருக்க ஜெபியுங்கள்.

## 4. திருச்சபைகளுக்காக ஜெபியுங்கள்!

சபைகள் பாதுகாக்கப்பட வேண்டும், ஆராதனை ஸ்தலங்களில் எந்த ஆபத்துகளும் நேரிடக்கூடாது. ஊழியர்கள் பாதிக்கப்படக் கூடாது. அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இதற்காக ஜெபியுங்கள்.

## 5. தீமைகள் தேசத்தில் பெருகாமலிருக்க ஜெபியுங்கள்!

மரணங்கள் ஏற்படாமலிருக்க, விவசாயங்கள் பாதிக்கப்படாமலிருக்க, வியாபாரங்கள் பாதிக்கப்படாமலிருக்க, மக்களின் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்படாமலிருக்க மன்றாடுங்கள்.

## 6. வலுசர்ப்பத்தின் கிரியைகள் அழிக்கப்பட ஜெபியுங்கள்!

தேசத்தின் மேல் தீமையை கட்டவிழ்க்க கிரியை செய்யும் வலுசர்ப்பத்தின் கிரியைகளை அழித்து ஜெபியுங்கள். வலுசர்ப்பத்தின் தேசம் செய்யும் தந்திரமானக் காரியங்கள் அமெரிக்காவில் பலிக்கவே கூடாது. கர்த்தர் தேசத்தை பாதுகாக்க, தீமைகளுக்கு அவர் அனுமதி அளித்து விடாமலிருக்க மன்றாடுங்கள்.

## 7. ஆளுகிறவர்களுக்காக, வர்த்தகர்களுக்காக ஜெபியுங்கள்!

இவர்கள் தங்களை பெலப்படுத்தி தேசத்தின் குடிகளுக்கு தீமை செய்யக்கூடாது. இவர்கள் மூலம் தேசத்தின் பொருளாதாரம் வீழ்ச்சியடையக் கூடாது. மற்ற தேசங்களை பாதிக்கிற எந்தக் காரியங்களையும் செய்யாமலிருக்க ஜெபியுங்கள்.



# Pray for America






Jesus Redeems MINISTRIES

JESUS REDEEMS MINISTRIES

Nalumavadi - 628211, Thoothukudi Dist., Tamilnadu, India.
Phone: +91 4639-220022 Email: info@jesusredeems.org